भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டமியற்றுத் துறை)

புது தில்லி, 20 அக்டோபர் 1998

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பமாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1882 (2/1882), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமையுடையான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமையுடையான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 74.00

# இந்தியப் புள்ளியியல் நிறுவனச் சட்டம், 1959

*(சட்ட எண் 57/1959)*

*[1959, டிசம்பர் 24]*

கல்கத்தாவில் தனது பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைத் தற்போது கொண்டிருக்கிற இந்தியப் புள்ளியியல் நிறுவனம் என வழங்கப்பெறும் நிறுவனத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமாக விளம்புவதற்கும், அதனுடன் தொடர்புடைய குறித்தசில பொருட்பாடுகளுக்கு வகைசெய்வதற்குமான சட்டம்.

இது இந்தியக் குடியரசின் பத்தாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் சட்டமாக இயற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், இந்தியப் புள்ளியியல் நிறுவனச் சட்டம், 1959 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "நிறுவனம்" என்பது, சங்கங்கள் பதிவுசெய்தல் சட்டம், 1860 இன்படி பதிவு செய்யப்பட்ட இந்தியப் புள்ளியியல் நிறுவனம் என்று பொருள்படும்;

(ஆ) "அமைப்பு விதிக்குறிப்பு" என்பது, சங்கங்கள் பதிவுசெய்தல் சட்டம், 1860இன்படி கூட்டுப் பங்கு நிறுமங்களின் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்நிறுவனத்தின் சங்க அமைப்பு விதிக்குறிப்பு என்று பொருள்படும்;

(இ) "விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகள்", சங்கங்கள்பதிவு செய்தல் சட்டம், 1860 இன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துகையில், எந்த விதியை அல்லது ஒழுங்குறுத்தும் விதியை (அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும்) வகுப்பதற்கு அது தகுதிறமுடையதாகயிருக்கிறதோ அந்த விதி அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதனையும் உள்ளடக்கும்; ஆனால் அதனுடைய அன்றாட நிருவாகத்தை நடத்துவதற்காக அந்த விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளின்படி வகுக்கப்பட்ட துணை விதிகள் அல்லது நிலையாணைகள் எவற்றையும் உள்ளடக்காது.

இந்தியப் புள்ளியியல் நிறுவனத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக விளம்புகை செய்தல்.

3. இந்தியப் புள்ளியியல் நிறுவனம் என வழங்கப்பெறும் நிறுவனத்தின் நோக்கங்கள், அதனைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமாக உருவாக்கக்கூடியதாக இருப்பதால், இந்தியப் புள்ளியியல் நிறுவனம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம் என ஈங்கிதனால் விளம்பப்படுகிறது.

இந்நிறுவனத்தால் பட்டங்களும் பட்டயங்களும் வழங்கப்படுதல்.

4. பல்கலைக் கழக மானியக் குழு சட்டம், 1956 இல் அல்லது அப்போதைக்கு செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அவ்வப்போது, இந்நிறுவனத்தால் தீர்மானிக்கப்படலாகும் புள்ளியியல் தேர்வுகளை இந்நிறுவனம் நடத்தி, புள்ளியியல் பட்டங்களையும் பட்டயங்களையும் வழங்கலாம்.

மைய அரசாங்கத்திடமிருந்து இந்நிறுவனத்திற்கு வழங்கப்படும் மானியங்கள், கடன்கள் முதலியன.

5. தேசிய வளர்ச்சிக்கான திட்டமிடுதலுடன் தொடர்புடைய ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி, திட்ட நடவடிக்கைகள், புள்ளியியல் பணி ஆகியவை உள்ளடங்கலாக, இந்நிறுவனத்தின் செயற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்கு இதனை இயல்விக்கும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கம், நிதியாண்டு ஒவ்வொன்றிலும், இதற்கென நாடாளுமன்றம் சட்டத்தின்வழி, உரிய பண

ஒதுக்கீடு செய்தபின்பு, மானியம், கடன் வாயிலாக அல்லது பிறவாறு அந்த அரசாங்கம் தான் தேவையெனக் கருதுகிற பணத் தொகைகளை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம்.

இந்நிறுவனத்தின் கணக்குகளின் தணிக்கை.

6. (1) இந்நிறுவனத்தின் கணக்குகள், நிறுமங்கள் சட்டம், 1956 இன்படி நிறுமங்களின் தணிக்கையாளராகச் செயலுறுவதற்கு உரிய தகுதிப்பாடுடைய தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தியக் கணக்காய்வர்-தலைமைத் தணிக்கையரையும் இந்நிறுவனத்தையும் கலந்தாய்வு செய்த பின்பு, மைய அரசாங்கம் தெரிந்தெடுக்கலாகும் தணிக்கையாளர்களை இந்நிறுவனம் அமர்த்துதல் வேண்டும்.

(2) மைய அரசாங்கம், தணிக்கையாளர்களின் கடமைகளைப் புரிவதற்கு தான் பொருத்தமெனக் கருதுகிற பணிப்புரைகளை அவர்களுக்குப் பிறப்பிக்கலாம்.

(3) அத்தகைய தணிக்கையாளர் ஒவ்வொருவரும், கடமைகளைப் புரிகையில், தகுமான அனைத்து நேரங்களிலும், இந்நிறுவனத்தின் பதிவேடுகள், கணக்குப் புத்தகங்கள், பதிவணங்கள், பிற ஆவணங்கள் ஆகியவற்றை அணுக உரிமை உடையவராவார்.

(4) தணிக்கையாளர்கள், இந்நிறுவனத்திற்கு தங்களது அறிக்கையை அனுப்பி வைத்தல் வேண்டும்; மற்றும் அதன்படி ஒன்றை மைய அரசாங்கத்திற்குத் தகவலளிப்பதற்காக அனுப்புதல் வேண்டும்.

இந் நிறுவனத்தின் குறித்தசில நடவடிக் கைகளுக்கு மைய அரசாங்கத்தின் முன்ஒப்பேற்புத் தேவை.

7. சங்கங்கள் பதிவு செய்தல் சட்டம், 1860 இல் அல்லது அமைப்பு விதிக்குறிப்பில் அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசாங்கத்தின் முன் ஒப்பேற்புடன் தவிர இந்நிறுவனம்,—

(அ) அது எந்த நோக்கங்களுக்காக நிறுவப்பட்டிருந்திருக்கிறதோ அல்லது இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு ஒட்டி முன்பு அது எந்த நோக்கங்களுக்காகப் பயன்பட்டு வருகிறதோ அந்த நோக்கங்கள் எவற்றையும் மாற்றுதலோ, நீட்டித்தலோ அல்லது சுருக்குதலோ ஆகாது; அல்லது பிற நிறுவனம் அல்லது சங்கம் எதனுடனும் முழுவதுமாகவோ பகுதியாகவோ தன்னை ஒருங்கிணைத்துக் கொள்ளுதல் ஆகாது; அல்லது

(ஆ) அமைப்பு விதிக்குறிப்பினை அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளை எந்த முறையிலும் மாற்றுதலோ அல்லது திருத்துதலோ ஆகாது; அல்லது

(இ) இந்நிறுவனத்தினால் கையகப்படுத்துவதற்காக மைய அரசாங்கத்தினால் குறிப்பாக அளிக்கப்பட்ட பணத்தொகையைக் கொண்டு, கையகப்படுத்தப்பட்ட சொத்து எதனையும், விற்பனை செய்தலோ, பிறவாறு அயலடைவு செய்தலோ ஆகாது:

வரம்புரையாக: இதற்கென மைய அரசாங்கத்தினால் பொது அல்லது தனியுறு ஆணை வாயிலாகக் குறித்துரைக்கப்படலாகும் அசைவியல் சொத்து அல்லது அசைவியல் சொத்தின் வகை எதனையும் பொறுத்தவரை, அத்தகைய ஒப்பேற்பு எதுவும் தேவையில்லை; அல்லது

(ஈ) கலைக்கப்படுதல் ஆகாது.

இந்நிறுவனத்தின் பணியின் செயல் திட்டம் முதலியவற்றைத் தயாரிப்பதற்காக மைய அரசாங்கம் குழுக்களை அமைத்தல்.

8. (1) மைய அரசாங்கம், தான் தேவையெனக் கருதினாலும், தேவையெனக் கருதுகிறபோதும், அதற்கு அமர்த்துவதற்குதான் பொருத்தமெனக் கருதுகிற எண்ணிக்கையிலுள்ள நபர்களைக் கொண்ட குழுக்களை அமைக்கலாம்; மேலும், அத்தகைய குழு ஒவ்வொன்றுக்கும் பின்வரும் கடமைகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் குறித்தளிக்கலாம்; அவையாவன:-

(அ) மைய அரசாங்கம், எந்த நிதியாண்டிற்கு நிதி வழங்குகிறதோ அந்த நிதியாண்டு ஒவ்வொன்றின்போதும் இந்நிறுவனத்தினால்

மேற்கொள்ளப்படுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பணியின் செயல் திட்டங்களையும், அத்தகையப் பணி பொறுத்துப் பொதுவான நிதி மதிப்பீடுகளையும் காட்டுகிற விவர உரைகளை, இயன்றவரையில், நிதியாண்டு ஒவ்வொன்றின் தொடக்கத்திற்கு முன்பும் தயார் செய்தலும் மைய அரசாங்கத்திற்குப் பணிந்தனுப்புதலும், மற்றும்

(ஆ) அத்தகைய பணியின் செயல் திட்டத்தை விரிவான நோக்கில் தீர்மானித்தல்.

(2) உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்ட குழு எதனாலும் குறிப்புரை செய்யப்பட்ட பணி எதனையும் மேற்கொள்வதற்கு இந்நிறுவனம் ஏற்றுக்கொள்ளாதவிடத்து, அவ்வாறு ஏற்றுக்கொள்ளாததற்குத் தன்னுடைய காரணங்களை மைய அரசாங்கத்திற்கு அது தெரிவித்தல் வேண்டும்.

செய்த பணியை மறு ஆய்வு செய்தல், சொத்திருப்புகளை ஆய்வு செய்தல் முதலியன.

9. (1) (அ) இந்நிறுவனத்தினால் செய்யப்பட்ட பணியையும் அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் மறுஆய்வு செய்வதற்கும்,

(ஆ) இதனுடைய கட்டிடங்கள், கருவிகள், பிறசொத்திருப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கும்,

(இ) இந்நிறுவனத்தினால் செய்யப்படும் பணியை மதிப்பீடு செய்வதற்கும்,

(ஈ) இந்நிறுவனத்தின் பணி தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்ததென மைய அரசாங்கம் கருதுகிற பொருட்பாடு எதன்மீதும் பொதுவாக அரசாங்கத்திற்குத் தேர்வுரை கூறுவதற்கும்,

மைய அரசாங்கம், அமர்த்துவதற்குத் தான் பொருத்தமெனக் கருதுகிற எண்ணிக்கையிலுள்ள நபர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைக்கலாம்; மற்றும் அந்தக் குழு, அதன்பேரில், தனது அறிக்கைகளை, மைய அரசாங்கம் பணிக்கலாகும் முறையில் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(2) மறு ஆய்வு, ஆய்வு அல்லது மதிப்பீடு ஒன்றைச் செய்வதற்கான உட்கருத்துப்பற்றி ஒவ்வொரு நேர்விலும் இந்நிறுவனத்திற்கு அறிவிப்புக் கொடுக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய மறு ஆய்வு, ஆய்வு அல்லது மதிப்பீடு ஒன்றின்போது வந்திருப்பதற்கும் கேட்கப்படுவதற்கும் உரிமை கொண்டுள்ள சார்பாற்றுநர் ஒருவரை அமர்த்துவதற்கு இந்நிறுவனம் உரிமை கொண்டது ஆகும்.

(3) உட்பிரிவு (1) இல் சுட்டப்பட்டுள்ள குழுவின் அறிக்கை எதிலும் வெளியாகியுள்ள அத்தகைய மறு-ஆய்வு, ஆய்வு அல்லது மதிப்பீட்டின் விளைவு குறித்தும் இந்நிறுவனத்தின் தலைவருக்கு மைய அரசாங்கம் தெரிவிக்கலாம்; மற்றும் அதன்பேரில், தலைவர் எடுத்த நடவடிக்கை, ஏதேனுமிருப்பின், அதை மைய அரசாங்கத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இனைஒட்டி, பொருட்பாடு எதன் தொடர்பாகவும், இந்நிறுவனத்தின் தலைவருக்கு மைய அரசாங்கம் தெரிவித்திருந்தது, அதைப் பொறுத்து மைய அரசாங்கம் தெளிவுறக்காணும் வகையில் தகுமான காலத்திற்குள் தலைவர் நடவடிக்கை எடுக்காதபோது, மைய அரசாங்கம், இந்நிறுவனத்தின் பொருட்டு அளிக்கப்பட்ட விளக்கங்கள் அல்லது செய்யப்பட்ட உரையீடுகள் எவற்றையும் ஓர்வு செய்த பின்பு, அந்த அறிவிக்கையில் கண்ட பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து தான் தேவையெனக் கருதுகிற பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம்.

குழுக்களுக்கு இந்நிறுவனம் வசதிகள் அளித்தல்.

10. பிரிவு 8 இன்படி அல்லது பிரிவு 9 இன்படி அமைக்கப்பட்ட ஒரு குழு எதற்கும், அதனுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதனை இயல்விக்கும் பொருட்டுத் தேவையான அனைத்து வசதிகளையும் அளிப்பதற்கு இந்நிறுவனம் கட்டுப்பட்டதாகும்.

ந்நிறுவனத்
ற்கு
ணிப்புரை
ளைப்
றப்பிப்பதற்கு
திகாரம்.

11. (1) மைய அரசாங்கம், பொதுநலன் கருதி, பதிவு செய்யப்பட்டு இந்நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படவேண்டியதான காரணங்களுக்காகத் தான் பொருத்தமெனக் கருதுகிற பணிப்புரைகளை இந்நிறுவனத்திற்குப் பிறப்பிப்பது தேவையென்று தெளிவுறக் காணுமாயின், அது அவ்வாறு செய்யலாம்; அந்தப் பணிப்புரைகள், இந்நிறுவனத்தை—

(அ) அந்தப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்படலாகும் கால அளவிற்குள் அமைப்பு விதிக்குறிப்பில் திருத்தம் செய்வதற்கு அல்லது விதி அல்லது ஒழுங்குறுத்தும் விதி எதனையும் வகுப்பதற்கு அல்லது அதில் திருத்தம் செய்வதற்கு,

(ஆ) மைய அரசாங்கம் இதற்கெனக் குறித்துரைப்பது பொருத்தமெனக் கருதும் முறையில் இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு,

அந்நிறுவனத்தை வேண்டுறுத்துகிற பணிப்புரைகளை உள்ளடக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகள் எவையும், அப்போதைக்குச் செல்லாற்றிலுள்ள சட்டம் எதிலும் அல்லது இந்நிறுவனத்தின் அமைப்பு விதிக்குறிப்பில் அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும் விதிகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், செல்திறம் உடையன ஆகும்.

குறிப்பு.—இந்நிறுவனம், பிரிவு 9(1) இன்படி அல்லது இந்தப் பிரிவின்படி மைய அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகளுக்குச் செல்திறம் அளிக்க, நேர்மையான அல்லது தகுமான காரணமில்லாமல் தவறுமாயின், மைய அரசாங்கம், அந்நிறுவனத்தின் அல்லது அதனுடைய பகுதி எதனின் பொறுப்பையும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலஅளவிற்கு எடுத்துக்கொள்வதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களை அமர்த்துவதன்மூலம், இந்நிறுவனத்தின் செயற்பணிகளின் கட்டாள்கையை, மேற்கொள்ளலாம்.

கட்டாள்கைச்
செயற்பணிகளை
மேற்கொள்வதற்கு
மைய
அரசாங்கத்திற்
குள்ள
அதிகாரம்.

12. (1) மைய அரசாங்கத்தின் கருத்தில்,—

(i) இந்த நிறுவனம், பிரிவு 9இன் உட்பிரிவு (4)இன்படி அல்லது பிரிவு 11 இன்படி பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதற்கும் செல்திறம் அளிப்பதில் நேர்மையான அல்லது தகுமான காரணமில்லாமல் தவறுகை செய்துள்ளது, அல்லது

(ii) இந்த நிறுவனம் அல்லது அதனுடைய பகுதி எதுவும் தொடர்பாக இந்நிறுவனத்தின் மன்றம் தனது அதிகாரங்களை மீறியுள்ளது அல்லது தவறாகப் பயன்படுத்தியுள்ளது.

என்று கருதுமாயின், மைய அரசாங்கம், எழுத்துவடிவிலான, ஆணை வாயிலாக அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் ஒரு காலஅளவிற்குள், உட்பிரிவு (2) இல் சுட்டப்பட்ட அமர்த்துகை எதனையும் செய்வதற்கு எதிராக மைய அரசாங்கம் தெளிவுறக்காணும் வகையில், காரணம் காட்டுவதற்கு இந்நிறுவனத்திற்குப் பணிப்புரை பிறப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனாலும் குறித்திடப்பட்ட காலஅளவிற்குள், மைய அரசாங்கம், தெளிவுறக்காணும் வகையில் காரணம் காட்டப்படவில்லையாயின், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுவதும் அதற்கான காரணங்களை உரைக்கிறதுமான ஆணை வாயிலாக, இந்நிறுவனத்தை அல்லது அதனுடைய பகுதி எதனையும் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் இரண்டு ஆண்டுக்கு மேற்படாத கால அளவிற்கு பொறுப்பில் எடுத்துக்கொள்வதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களை மைய அரசாங்கம் அமர்த்தலாம்.

(3) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அல்லது நிறுவனத்தின் அமைப்பு விதிக்குறிப்பு அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும்

விதிகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (2) இன்படி ஓர் ஆணையைப் பிறப்பிப்பதன்பேரில், அந்த ஆணையில் குறித்துரைக்கப்பட்ட கால அளவின்போது,—

(அ) அந்த ஆணை இந்நிறுவனத்தைப் பொறுப்பில் கொண்டிருக்கிற நபர் அல்லது நபர்கள் எவருக்கும் வகைசெய்கிறவிடத்து,—

(i) தலைவர் உள்ளடங்கலாக மன்றத்தின் உறுப்பினர்களாகப் பதவி வகித்து வருகிற அனைவரும் அவ்வாறான தங்கள் பதவிகளை விட்டு அகன்றுவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ii) இந்நிறுவனத்தைப் பொறுப்பில் கொண்டிருப்பதற்கு உட்பிரிவு (2)இன்படி அமர்த்தப்பட்ட நபர் அல்லது நபர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதன் வாயிலாகவோ பிறவாறாகவோ இந்நிறுவனம் பொறுத்து, இந்நிறுவனத்தின் தலைவரின் அல்லது மன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் செலுத்துதலும், அனைத்துக் கடமைகளையும் புரிதலும் வேண்டும்;

(ஆ) அந்த ஆணை இந்நிறுவனத்தின் பகுதி எதனையும் பொறுப்பில் கொண்டிருக்கிற நபர் அல்லது நபர்கள் எவருக்குள் வகை செய்கிறவிடத்து, அவ்வாறு அமர்த்தப்பட்ட நபர் அல்லது நபர்கள் மட்டுமே அந்தப் பகுதி தொடர்பாக தலைவரின் அல்லது மன்றத்தின் அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்துவதற்கும் கடமைகள் அனைத்தையும் புரிவதற்கும் உரிமைகொண்டவர் ஆவர்.